## <u>இராமநாதபுரம் நகராட்சி</u>

இராமநாதபுரம் நகராட்சியில் 2020–அக்டோபர் மாதத்திற்கான நகர் மன்ற அவசர கூட்டம் 15.10.2020-ந் தேதி காலை 11.33 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்:-

<table>
<tr>
<td>பொருள் எண்..1</td>
<td>இராமநாதபுரம் நகராட்சி, சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2020–2021ம் நிதி ஆண்டின் கீழ், இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எம்.மணிகண்டன் அவர்கள் பரிந்துரை செய்த பணிகளான கீழ்க்கண்டவாறாக ரூ.15.00/– லட்சம் மதிப்பீட்டிற்கு கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இராமநாதபுரம் அவர்களின் கடிதம் ந.க.எண்.ஆர்4/2075/2020, நாள்.01.10.2020–ன்படி 2020–21ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட அரசு வழிகாட்டு நெறிமுறைகளுக்குப்பட்டு மதிப்பீடுகள் சமர்ப்பிக்குமாறு கோரியுள்ள பரிந்துரை கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>சட்ட மன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் – 2020–21</th><th>மதிப்பீடு (ரூ) (இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>இராமநாதபுரம் நகராட்சி, வார்டு எண்–1, தெற்கு ரத வீதி (மறவர் சங்கம் அருகில்) LED மின் விளக்கு அமைத்தல்</td><td>5.00</td></tr>
<tr><td>2.</td><td>இராமநாதபுரம் நகராட்சி, வார்டு எண்–26, வண்டிக்காரத் தெரு (பொன்னையா மெஸ் அருகில்) LED மின் விளக்கு அமைத்தல்</td><td>5.00</td></tr>
<tr><td>3.</td><td>இராமநாதபுரம் நகராட்சி, வார்டு எண்–22, கண்ணகி தெரு (கண்ணன் கோயில் அருகில்) LED மின் விளக்கு அமைத்தல்</td><td>5.00</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>15.00</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு– 1.</u>மன்றம் பதிவு செய்யலாம்.</td>
<td>தீர்மானம் எண்.1255<br>அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | 2.இப்பணி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டபணியாதலால் நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களது முன் ஒப்புதல் பெற்று நிர்வாக அனுமதி பெறுவதற்கு பரிந்துரை செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 3033/2020/இ1 | |

**தனி அலுவலர் மற்றும்**
**நகராட்சி ஆணையர்(பொ)**
**இராமநாதபுரம் நகராட்சி**

**இராமநாதபுரம் நகராட்சி**

**இராமநாதபுரம் நகராட்சியில் 2020 அக்டோபர் மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டம் 29.10.2020–ந் தேதி காலை 11.05 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்:-**

| | | |
|---|---|---|
| பொருள் எண்..1 | இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் அக்டோபர் 2020–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.1256– பதிவு செய்யப்பட்டது.** | **தீர்மானம் எண்.1256**<br>**பதிவு செய்யப்பட்டது.** |
| பொருள் எண்..2 | இராமநாதபுரம் நகராட்சி பொறியாளர் அக்டோபர் 2020–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு–** மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.1257– பதிவு செய்யப்பட்டது.** | **தீர்மானம் எண்.1257**<br>**பதிவு செய்யப்பட்டது.** |
| பொருள் எண்..3 | இராமநாதபுரம் நகராட்சி, பொறியியல் பிரிவில் இயங்கி வரும் பாதாள சாக்கடைஅடைப்பு எடுக்கும் லாரி வாகனம் எண் TN65-L-5922க்கு 2020–21–ம் ஆண்டிற்கான தகுதி சான்று பெறுவதற்கு பழுதுநீக்கம் பணி மேற்கொள்ளும் பணிக்கு 05.10.2020–ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக மூன்று விலைப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன. | **தீர்மானம் எண்.1258**<br>**மன்றப் பொருள் தொடர்பான அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.** |

| வ.எண் | வரப்பெற்ற விலைப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | வழங்கியுள்ள விலைவிகிதம் கூடுதல் /குறைவு (GST-உள்பட ரூ.) |
|---|---|---|
| 1. | M/s.N.S.Auto Electrical Works,<br>202/3A, Peravoor Village, | 45,930/– |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>Devipattinam(Via),<br>Ramanathapuram.</td><td></td></tr>
<tr><td>2.</td><td>M/s.Sami Auto Mobile Works,<br>Srinivasa Weight Station –Near,<br>Madurai –Rameswaram Road,<br>Ramanathapuram.</td><td>46,330/–</td></tr>
<tr><td>3.</td><td>Sri Ragavendra Auto Works,<br>Pillaiyarkovil Stop,<br>Madurai Road,<br>Ramanathapuram.</td><td>47,230/–</td></tr>
</table>
மேற்கண்ட வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் விலைப்புள்ளி வழங்கியுள்ள "M/s.N.S.Auto Electrical Works,Ramanathapuram அவர்களது குறைந்த விலைவிகிதத்தினை ஏற்று மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு–1</u>)மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2)மேற்காணும் பணி, பாதாள சாக்கடை திட்ட பணியாதலால் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று பழுது நீக்கப்பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>
ந.க.எண்.2294/2020/E1<br>
தீர்மானம் எண்.1258– மன்ற<u>ப் பொருள்</u> தொடர்பான அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..4</td>
<td>இராமநாதபுரம் நகராட்சி, பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் குப்பை அகற்றும் வாகனம் TDR– 4905–க்கு 13.10.2020–ந் தேதியுடன் தகுதிச் சான்று முடிவடைந்ததால் தகுதிச் சான்று பெறுவதற்கு பழுது நீக்கப் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.25/– லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u>–1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2)இப்பணி பொது சுகாதாரப் பணி ஆதலால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர், ஆணையரின் முன் ஒப்புதல் பெற்று அரசு அங்கீகாரம் பெறப்பட்ட நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெற்று, தகுதிச் சான்று பெற</td>
<td>தீர்மானம் எண்.1259<br><br>அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>பணி உத்திரவு வழங்குவதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்.2587/2020/H1<br>**தீர்மானம் எண்.1259– அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.**</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்..5</td><td>இராமநாதபுரம் நகராட்சி, பொறியியல் பிரிவில் இயங்கி வரும் பாதாள சாக்கடை கழிவு அள்ளும் ஆட்டோ (Desilting Machine Auto) வாகனம் எண் TN65-P-8538க்கு பழுதுநீக்கம் பணி மேற்கொள்ளும் பணிக்கு 06.10.2020–ம் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக மூன்று விலைப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.<br><table>
<tr><td>வ.எண்</td><td>வரப்பெற்ற விலைப்புள்ளிதாரர்களின் பெயர்கள்</td><td>வழங்கியுள்ள விலைவிகிதம் கூடுதல் /குறைவு (GST-உள்பட ரூ.)</td></tr>
<tr><td>1.</td><td>M/s.Ragem Cars,<br>3/458, Pazhangulam Bus Stop.<br>Devipattinam Main Road,<br>Peravoor,<br>Ramanathapuram.</td><td>9,214/–</td></tr>
<tr><td>2.</td><td>M/s.Sami Auto Mobile Works,<br>Srinivasa Weight Station –Near,<br>Madurai –Rameswaram Road,<br>Ramanathapuram.</td><td>11,100/–</td></tr>
<tr><td>3.</td><td>M/s.A.K.Moorthy Auto Works,<br>Kandhari Amman Kovil Street,<br>Ramanathapuram.</td><td>11,700/–</td></tr>
</table><br>மேற்கண்ட வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் விலைப்புள்ளி வழங்கியுள்ள “M/s.Ragem Cars, Ramanathapuram அவர்களது குறைந்த விலைவிகிதத்தினை ஏற்று மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>–1)**மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)**இப்பணி பாதாள சாக்கடை திட்ட பணியாதலால் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று பணி உத்திரவு வழங்குவதையும் மன்றம்</td><td>**தீர்மானம் எண்.1260**<br>**அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.**</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்.2293/2020/E1<br>தீர்மானம் எண்.1260– அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்..6</td><td>இராமநாதபுரம் நகராட்சிக்கு சொந்தமான பாத்தியமான ஆண்டு குத்தகை இனங்கள் கீழ்க்கண்ட விபரப்படி 31.03.2020 உடன் முடிவடைகிறது. எனவே கீழ்க்கண்ட விபரப்படியுள்ள ஆண்டு குத்தகையினங்களை மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் 2020–2021 முதல் 2022–2023 முடிய குத்தகை ஒப்படைக்க வேண்டி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>குத்தகை இனம்</th><th>ஏலக்கேள்ளி காப்பு தொகை (ரூ)</th><th>கூடுதல் காப்புத் தொகை (ரூ)</th><th>மின் கட்டண காப்புத் தொகை (ரூ</th></tr>
<tr><td>1.</td><td>இராமநாதபுரம் நகராட்சி, புதிய மற்றும் பழைய பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளின் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்</td><td>7,00,000/–</td><td>5,00,000/–</td><td>–</td></tr>
<tr><td>2.</td><td>இராமநாதபுரம் நகராட்சி, புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறை மற்றும் குளியலறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்</td><td>5,00,000/–</td><td>10,00,000/–</td><td>2,000/–</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு–</u>1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)ஏலம்/குத்தகை நிபந்தனைகளுக்கு ஒப்புதல் அளிக்கலாம்.<br>கோப்பு.எண்.212/2019/அ1</td><td>தீர்மானம் எண்.1261<br>அலுவலகக் குறிப்பு ஏற்பு.</td></tr>
</table>

<table>
<tr>
<td>பொருள் எண்..7</td>
<td>இராமநாதபுரம் நகராட்சிக்கு பாத்தியமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறை மற்றும் குளியலறை கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு “2021 முதல் 2023” வரை (மூன்றாண்டு தொகுப்பு) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் மக்கள் குரல் நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் பட்டியல் தொகை ரூ.23,688/– ஐ வழங்க மன்றப் பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு–1</u>)மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.212/2018/அ1<br>தீர்மானம் எண்.1262– அலுவலகக் குறிப்பு ஏற்பு.</td>
<td>தீர்மானம் எண்.1262<br>அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..8</td>
<td>இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம் 2020–2021, பாதாள சாக்கடை திட்டம் கழிவு நீர் உந்து குழாய் அமைடப்பு (Sewer Line) சரி செய்யும் பணிக்கு 15.10.2020–ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.
<table>
<tr><th>வ.எண்.</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ) (லட்சத்தில்)</th><th>வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ)</th></tr>
<tr><td>1.</td><td>M/s.TamilNadu Water Supply and Drainage Systems, No-1/284, VIP Nagar, Rasipuram, Namakkal-Dist.</td><td>3, 20,000/–</td><td>0.16% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.கே.சத்தியநாதன், ஒப்பந்ததாரர், இராமநாதபுரம்.</td><td>3,20,000/–</td><td>1.12% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் “M/s,TamilNadu Water Supply and Drainage Systems, No-1/284, VIP Nagar,</td>
<td>தீர்மானம் எண்.1263<br>அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>Rasipuram” அவர்களது 0.16% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு–</u> 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)இப்பணி பாதாள சாக்கடை திட்ட பணியாதலால் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று பணி உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்.2904/2020/E1<br>தீர்மானம் எண்.1263– அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்..9</td><td>இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் நிதி 2020–2021, வார்டு எண்–33, மூலக்கொத்தளம் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு கடைசி தெருவில் பகிர்மான குழாய் மாற்றி அமைக்கும் பணிக்கு 15.10.2020–ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.<br><table><tr><th>வ.எண்.</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ) (லட்சத்தில்)</th><th>வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ)</th></tr><tr><td>1.</td><td>திரு.ஆர்.எஸ்.இராமமூர்த்தி,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம்..</td><td>1,00,000/–</td><td>1.10 % சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்</td></tr><tr><td>2.</td><td>திருமதி.ஆர்.இராஜசுலோச்சனா,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம்.</td><td>1,00,000/–</td><td>0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr></table><br>மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திருமதி.ஆர்.இராஜசுலோச்சனா, இராமநாதபுரம் அவர்களது 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.</td><td>தீர்மானம் எண்.1264<br>அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<u>அலுவலக குறிப்பு– </u> 1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இப்பணி குடிநீர் விநியோகம் பணியாதலால் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று பணி உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>
ந.க.எண்.2911/2020/E1<br>
தீர்மானம் எண்.1264– அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..10</td>
<td>
இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்டம் 2020–2021, பாதாள சாக்கடை திட்ட பிரதான கழிவு நீர் குழாய் (Pumping Main) பழுது நீக்கம் செய்தல் பணி மேற்கொள்ள 15.10.2020–ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.
<table>
<tr><th>வ.எண்.</th><th>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ) (லட்சத்தில்)</th><th>வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ)</th></tr>
<tr><td>1.</td><td>திரு.கே.சத்தியநாதன்,<br>ஒப்பந்ததாரர்,<br>இராமநாதபுரம்.</td><td>2,00,000/–</td><td>1.60% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>M/s.TamilNadu Water Supply and Drainage Systems,<br>No-1/284, VIP Nagar,<br>Rasipuram,<br>Namakkal-Dist.</td><td>2,00,000/–</td><td>0.20% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
</table>
மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் “M/s,TamilNadu Water Supply and Drainage Systems, No-1/284, VIP Nagar, Rasipuram” அவர்களது 0.20% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்று மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
</td>
<td>
தீர்மானம் எண்.1265
அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.
</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td><u>அலுவலக குறிப்பு–</u> 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2)இப்பணி பாதாள சாக்கடை திட்ட பணியாதலால் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று பணி உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்.2903/2020/E1<br>தீர்மானம் எண்.1265– அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..11</td>
<td>இராமநாதபுரம் நகராட்சியில் சுகாதாரப் பிரிவில் துாய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.கா.பூமிநாதன் என்பவருக்கு வாகன முன்பணம் ரூபாய்.30,000/– 2013–2014ல் வழங்கப்பட்டுள்ளது. முன்பண பதிவேடுகளில் பதிவுகள் செய்யப்பட்டுள்ளது.<br><br>
<table>
<tr><td>முன்பண பதிவேடு பக்கம் 9–ல் 5/2013</td><td>11x542=Rs.5,962/-</td></tr>
<tr><td>முன்பண பதிவேடு பக்கம் 9–ல் 4/2014</td><td>11x542=Rs.5,962/-</td></tr>
<tr><td>முன்பண பதிவேடு பக்கம் 9–ல் 4/2015</td><td>12x542=Rs.6,504/-</td></tr>
<tr><td>முன்பண பதிவேடு பக்கம் 9–ல் 4/2016</td><td>12x542=Rs.6,504/-</td></tr>
<tr><td>முன்பண பதிவேடு பக்கம் 9–ல் 4/2017</td><td>12x542=Rs.6,504/-</td></tr>
<tr><td>முன்பண பதிவேடு பக்கம் 75–ல் 4/2018</td><td>12x542=Rs.6,504/-</td></tr>
<tr><td>முன்பண பதிவேடு பக்கம் 76–ல் 4/2019</td><td>12x542=Rs.6,504/-</td></tr>
<tr><td>முன்பண பதிவேடு பக்கம் 77–ல் 4/2020</td><td>2x542=Rs.1,084/-</td></tr>
<tr><td></td><td>ரூ.46,344/–</td></tr>
</table>
<br>வாகன கடன் முன்பணம் – 30,000<br>வட்டி – 6,100</td>
<td>தீர்மானம் எண்.1266<br><br>அலுவலகக் குறிப்பு ஏற்பு.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>மொத்தம் – <u>36,100</u><br><br>அன்னார் செலுத்த வேண்டிய தொகை ரூ.36,100/—ஆகும். கூடுதலாக பிடித்தம் செய்யப்பட்டது ரூ.10,244/— அன்னாருக்கு திரும்ப வழங்க மன்ற பொருள் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு—</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்.1673/2020/எப்1<br><br>தீர்மானம் எண்.1266— அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்..12</td><td>இராமநாதபுரம் நகராட்சி, பொது சுகாதார வாகனம் TN65-AJ—6570—ன் டயர்கள் பழுதடைந்து பணி பார்க்க இயலாத நிலையில் உள்ளது. 4—எண்ணம் டயர்கள் மாற்றுவதற்கான உத்தேச செலவினம் ரூ.12,400/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இப்பணி பொது சுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.<br><br><table><tr><td>1.</td><td>ஸ்ரீமுருகன் டயர்ஸ், இராமநாதபுரம்.</td><td>4 எண்ணம் டயர்ஸ்</td><td>ரூ.12,400/—</td></tr><tr><td>2.</td><td>லெட்சுமி ஆட்டோ மொபைல்ஸ், இராம்நாட்.</td><td>4 எண்ணம் டயர்ஸ்</td><td>ரூ.14,000/—</td></tr><tr><td>3.</td><td>பிரிமியர் கார்ஸ்பேர்ஸ், இராமநாதபுரம்.</td><td>4 எண்ணம் டயர்ஸ்</td><td>ரூ.13,400/—</td></tr></table><br>மேற்காணும் விபரப்படியான மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில், குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ‘‘ஸ்ரீமுருகன் டயர்ஸ், இராமநாதபுரம்’’ நிறுவன விலைப்புள்ளியினை ஏற்று மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு—</u> 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2)இப்பணி பொது சுகாதாரப் பணியாதலால் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளிகளின் அடிப்படையில் பணி உத்திரவு வழங்குவதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.3040/2020/H1<br>தீர்மானம் எண்.1267— அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.</td><td>தீர்மானம் எண்.1267<br><br>அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்..13 | இராமநாதபுரம் நகராட்சியானது இது வரை மூன்று முறை திறந்தவெளி மலம் கழிப்பிடம் இல்லாநகரமென சான்று பெறப்பட்டுள்ளது. தற்பொழுது அனைத்து வார்டுகளிலும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து வார்டு பகுதிகளிலும் பொதுக்கழிப்பறைகளும் மற்றும் சமுதாய கழிப்பறைகளும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு பொது மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். தற்பொது தூய்மை இந்தியா திட்டத்தின் இரண்டாம் பகுதியான SBM 2.0 ன் மற்றும் ODF + வழிகாட்டுதல்கள் கையேட்டின்படி அனைத்து வார்டு பகுதிகளிலும் உள்ள பள்ளிகளில் மாணவ, மாணவியர்களிடமும், ஆசிரியர்களிடமும் மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்களிடமும நாங்கள் மலம் மற்றும் சிறுநீர் கழிப்பதற்கு திறந்த வெளியினை பயன்படுத்த மாட்டோம் என்று உறுதிமொழி பெறப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்களுக்கு திறந்தவெளி மல ஜலம் கழிப்பது ஒழித்தல் சம்மந்தமாக தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. எனவே இந்நகராட்சி பகுதியை திறந்தவெளி மலம் ஜலம் கழித்தலற்ற (ODF+) பகுதியாக அறிவிக்கை செய்ய உள்ளது. தூய்மை இந்தியா திட்டத்தின் இரண்டாம் பகுதி 15''வது குழுவின் நிதி பெறுவதற்கு ODF + அறிவிக்கை செய்திட ஏதுவாக பொது மக்களிடம் ஆட்சேபனை அறிவிப்பினை ஏதேனும் இரண்டு தினசரி நாளிதழில் விளம்பரம் வெளியிடுவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>** 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.தூய்மை இந்தியா திட்டத்தின் இரண்டாம் பகுதி 15வது நிதி குழுவின் நிதி பெறுவதற்கு ODF + அறிவிக்கை செய்திட ஏதுவாக பொது மக்களிடம் ஆட்சேபனை அறிவிப்பினை ஏதேனும் இரண்டு தினசரி நாளிதழில் விளம்பரம் வெளியிடுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>3.செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1268– அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.** | **தீர்மானம் எண்.1268**<br><br>**அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.** |
| பொருள் எண்..14 | இராமநாதபுரம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் இரண்டாம் பகுதியான SBM 2.0 ன் 15வது நிதிக்குழு நிதித் தொகை பெற்றிட குப்பையில்லா நகராட்சிக்கான மூன்று நட்சத்திர அங்கீகாரம் (3 Star Rating) பெற்றிட தெரிவிக்கப்பட்டுள்ளது. நமது நகராட்சி பகுதியில் அனைத்து வார்டுகளிலும் மின்கல இயக்கு வாகனங்கள் மற்றும் இலகுரக வாகனங்கள் மூலம் குப்பைகள் தரம் பிரித்து சேகரிக்கப்பட்டு நுண் உரக்கூட மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு | **தீர்மானம் எண்.1269**<br><br>**அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.** |

| | | |
|---|---|---|
| | அறிவியல் முறைப்படி குப்பைகள் கையாளப்பட்டு இறுதியாகக்கம் செய்யப்பட்டு வருகிறது. எனவே இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் 100% சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்ற விபரத்தினை பொதுமக்களின் ஆட்சேபனை கோரி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தி வெளியிடுவதற்கும் அதற்கான செலவின தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>** 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் 100% சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்ற விபரத்தினை பொதுமக்களின் ஆட்சேபனை கோரி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தி வெளியிடுவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3.செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.1269– அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.** | |
| பொருள் எண்..15 | **<u>2020–2021ம் ஆண்டு முதல் 2022–2023ம் ஆண்டின் குத்தகை</u>**<br>**<u>பொது நிபந்தனைகள்</u>**<br>**1)** எல்லா ஏலங்களும் கீழ்க்கண்ட பொது நிபந்தனைகளுக்கும், சிறப்பு கட்டுப்பாடுகளுக்கும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் அச்சட்டத்தின் கீழ் செய்யப் பெற்றுள்ள விதிகள் வழிச்சட்டங்கள் உப விதிகள்,கணக்கு விதிகள், அரசாணைகள், நகர்மன்றம் விதித்துள்ள அல்லது இனி விதிக்கும் பொதுக்கட்டுப்பாடுகள், சிறப்புக்கட்டுப்பாடுகள் யாவற்றிற்கும் உட்பட்டவையாகும். ஒவ்வொரு உரிமையாணையும், நகர்மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும். மேலும் அவ்வப்போதைக்காவது ஏற்படுத்தப்படும் அல்லது அரசு பிறப்பிக்கும் உத்திரவுகளுக்கு உட்பட்டதாகும்.<br>**2)** எந்தவொரு இனத்தையும் ஏலம் கேட்கும் முன்பே ஏலம் கேட்பவர் பெயரில் அல்லது குடும்பத்தில் உள்ள நபர்களின் பெயரில் நகராட்சியில் சொத்துவரி, தொழில்வரி, தண்ணீர்வரி, ஆக்கிரமிப்புக்கட்டணம் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான காலியிடங்கள், இதர கட்டணங்கள், கடைகள் மற்றும் வேறு எந்த இனத்திற்கும் 2020–2021 முடிய உள்ள காலத்திற்கு பாக்கி ஏதுமில்லை என்ற சான்றிதழை ஏலம் கேட்கும் 2 தினங்களுக்கு முன்னர் நகராட்சியில் பெற்றுக்கொண்டுதான் ஏலத்தில் கலந்துகொள்ள வேண்டும். மேற்படி சான்றிதழ் பெறாவிட்டால் ஏலத்தில் கலந்துகொள்ள கண்டிப்பாக அனுமதிக்க முடியாது.<br>**3)** ஏலம் கோரும் நபர்கள் ஏலக்காப்புத் தொகை செலுத்தும் போது தனது குடியிருப்பு முகவரிக்கான ரேசன்கார்டு நகல், புகைப்படம், வருமான வரித் துறையினரின் பேன் கார்டு நகல் ஆகியவற்றினை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். பேன் கார்டு இல்லாதவர்கள் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது. | **தீர்மானம் எண்.1270**<br>**அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.** |

| | | |
|---|---|---|
| | 4) இந்திய வருமான வரித்துறையின் விதிகள் 271CAன்படி குத்தகை மதிப்பில் 2% தொகையும், அவ்வரியில் 3% கல்வி வரியும் சேர்த்து நகராட்சியில் உள்ள நகராட்சி கருவூலத்தில் குத்தகை தொகை செலுத்தும் போதே செலுத்திவிட வேண்டும். மேலும் குத்தகை இனங்களுக்கு சேவை வரி **18%ம் குத்தகைத் தொகையும் கருவூலத்தில் செலுத்த வேண்டும்.**<br><br>5) ஏற்கனவே உரிமதாரர்களாக இருப்பவர்களுக்கு நகராட்சியிலிருந்து தரவேண்டிய எந்தவிதமான தொகையிலிருந்தும் இதில் கண்ட உரிம இனங்களுக்கு தேவையான தொகையை வைப்புத் தொகையாக ஈடுசெய்து கொள்ள அனுமக்கப்படமாட்டாது. இந்த ஏலங்கள் தனி நடவடிக்கைகள் பழைய உரிம இனங்களுக்கும் இவைகளுக்கும் தொடர்பு செய்ய இடமில்லை. ஒவ்வொரு குத்தகை இனத்திற்கும் தனித்தனி டெபாசிட் செலுத்த வேண்டும். டெபாசிட் தொகை மற்றும் கூடுதல் டெபாசிட் தொகை நகர எல்லைக்குள் உள்ள ஏதேனும் ஒரு வங்கியில் மாற்றத்தக்க வகையில் கேட்பு வரைவோலையாக ஏலத்திற்கு (டிமாண்ட் டிராப்ட்) முந்தைய நாள் பிற்பகல் 5.00 மணிக்குள் கொடுத்து ஏலத்தில் கலந்து கொள்வதற்கான அனுமதி சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும். அதன் பின்பு பெறப்படும் வங்கி வரைவோலைகள் ஏற்று கொள்ளப்படாமாட்டாது. ஏல டெபாசிட் ரொக்கமாக பெற்றுக் கொள்ள இயலாது. ஏலத் தேதிக்கு முன்பு அனுமதிச்சீட்டு பெற்றவர்கள் மட்டுமே ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.<br><br>6) அரசியல் சம்பந்தமாக இதர குற்றங்களுக்காக அல்லது நன்னடத்தை தவறு சம்பந்தப்பட்ட இதர குற்றங்களுக்காவது மேற்படி குற்றங்களில் மன்னிப்பு அல்லது ரத்து செய்யப்படாமல் இருந்தாலும் வேறு கிரிமினல் கோர்ட்டில் ஆறு தினங்களுக்கு மேல் தண்டனை அடைந்தவர்களும் ஏலம் கோருவதை ஆணையாளர் அவர்கள் தடுக்கவும், ஏலம் கேட்பவர் போதுமான சொத்து இல்லாதவராகவோ அல்லது ஏலத்தொகையை வீணாக ஏற்றுகிறார் என்றோ ஆணையாளர் அவர்கள் கருதினால் அந்த நபர் ஏலம் கோருவதை தடுக்கவும் ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. இந்த ஏலங்கள் சம்பந்தமாக பிறப்பிக்கும் எல்லா கேள்விகளுக்கும் ஆணையாளர் அவர்கள் செய்யும் முடிவே இறுதியானதாகும். ஏலம் நடக்கும் போது சில இனங்களுக்கு கூடுதல் காப்புத் தொகை செலுத்த வேண்டும் என ஆணையாளர் கருதும்பட்சத்தில் மேற்படி கூடுதல் காப்புத்தொகை ஏலதாரர்கள் செலுத்த வேண்டும்.<br><br>7) பட்டியலில் கண்டுள்ளபடி எல்லா உரிமையாணைகளும் ஏலசமயத்தில் வேறு விதமாகத் தீர்மானிக்கப்பட்டு இருந்தாலொழிய அல்லது சம்பந்தப்பட்ட இனத்தின் அடிப்படையில் குறிப்பிட்டிருந்தாலொழிய முறையே 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ந் தேதி முதல் 2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் தேதி முடிய உள்ள மூன்றாண்டு காலத்திற்கு ஏலம் விடப்படும். | |

8) இந்நகராட்சியில் இதற்கு முன் ஏலம் எடுத்தவர்கள் குத்தகை தொகையினை ஒழுங்காக கணக்கு தீர்க்காதவர்கள் இந்த ஏலத்தில் நேர் முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது.

9) ஆனால் ஏலம் எடுத்தவர்கள் நகர்மன்றத்தால் உறுதி செய்யப்படும் முன் எக்காரணத்தைக் கொண்டும் ஏலத்திலிருந்து விலகிக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். அப்படி ஏலத்தில் இருந்து விலகிக் கொள்ளும் பட்சத்தில் அவர்கள் கட்டிய ஏலப் பொறுப்புத் தொகையை இழப்பதுடன் மறு ஏலம் விடப்படுவதால் நகராட்சிக்கு ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் அவர்களே ஜவாப்தாரி ஆவார்கள். மேலும் அவர்கள் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு நகராட்சியில் எந்த ஒரு ஒப்பந்தத்திலும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

10) ஏலம் எடுத்தவர்கள் ஏலப்பதிவேட்டிலும், தயார் செய்து வைத்திருக்கும் ஒப்பந்தத்திலும் ஏலம் முடிந்தவுடனேயே கையொப்பம் செய்தவுடன் தற்காலிக ஒப்பந்தத்தில் கையொப்பம் இட வேண்டும். ஏலம் உறுதி செய்யப்பட்ட உத்தரவு கிடைத்த ஏழு தினங்களுக்குள் ஒப்பந்தப்பத்திரம் எழுதி முடிக்க போதுமான முத்திரை ஸ்டாம்புகளை சமர்பித்து நகராட்சி நிர்ணயிக்கும் நிபந்தனைப்படி ஒப்பந்தப்பத்திரம் எழுதி கையெழுத்திட்டுத் தரவேண்டும்.

11) முதல் ஏலத்தில் சில காரணத்தினால் வராமல் இருந்தவரோ, இருந்தும் கோராதவரோ மறு ஏலம் கோரவிரும்பினால் குறிப்பிட்ட ஏல இனத்தில் கேட்கப்பட்டு அல்லது ஒப்பந்தப்புள்ளிகளில் குறிப்பிடப்பட்டு நிர்ணயம் செய்யப்பட்ட உயர்ந்த பட்ச கேள்வியை முடிவு செய்யப்பட்ட நேரத்திலிருந்து 48 மணி நேரத்திற்குள் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித் தொகை முழுவதையும் நகராட்சி கருவூலத்தில் செலுத்திவிட்டு உரிய ரசீதுடன் ஏலத் தொகையில் குறைந்த பட்சம் 25% கூடுதலாக சேர்த்து ஏலத்தொகையை குறிப்பிட்டு (இதில் விடுமுறை நாட்கள் சேராது) மனுவை ஆணையர் அவர்களிடம் சேர்ப்பிக்க வேண்டும். மறு ஏலம் அவர் எழுத்து மூலம் குறிப்பிட்ட தொகையிலிருந்து ஆரம்பித்து நடத்தப்படும். இந்த நடைமுறையில் ஒரு ஏலத்தினை எத்தனை முறை வேண்டுமானாலும் நடத்துவதற்கு ஆணையாளருக்கு முழு அதிகாரம் உண்டு. மேலும் எந்த காரணமும் காட்டாமல் இத்தகைய விண்ணப்பங்களை யாதொரு காரணம் காட்டாமலேயே நிராகரிக்க ஆணையாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

12) எல்லா குத்தகைகளும் ஏலம் உறுதி செய்யப்பட்டு அறிவிப்பு கிடைக்கப் பெற்ற 7 தினங்களுக்குள் முதல் ஆண்டிற்குரிய குத்தகை தொகை முழுவதும் ஒரே தவணையில் செலுத்தப்பட வேண்டும். ஆரம்பத்தில் ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையில் இரண்டாமாண்டில் 5% குத்தகை தொகை உயர்வும் மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டின் தொகையில் 5% குத்தகை தொகை உயர்வும் செய்யப்படும். உதாரணமாக 5% குத்தகை உயர்வுத் தொகை கீழ்குறிப்பிட்டுள்ளவாறு அமையும்.

1. ஆரம்ப ஆண்டு குத்தகை தொகை ரூ.100 என்றால் (ரூபாய் நூறு மட்டும்)

| | | |
|---|---|---|
| | 2. இரண்டாம் வருடத்திற்கான குத்தகை தொகை ரூ.105 (ரூபாய் நூற்றி ஐந்து மட்டும்)<br><br>3. இரண்டாம் வருடத்திற்கான குத்தகை தொகை ரூ.110.25 (ரூபாய் நூற்றிபத்து மற்றும் இருபத்து ஐந்து பைசா மட்டும்)<br><br>ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்காமலே ஒப்பந்தக்காரர் உரிமையாணை ஸ்தலத்தில் பிரவேசித்து உரிமையாணையை அனுபவிக்க ஆரம்பிக்கும் பட்சத்தில் அவர் ஏலதேதியில் எழுதிக் கொடுத்த தற்காலிக ஒப்பந்தத்திற்கு இந்த ஏல விளம்பரத்தில் கண்டுள்ள எல்லா நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டவராவார். மேலும் கூடுதல் காப்புத் தொகை மூன்றாண்டு குத்தகை தொகைக்கு ஈடுசெய்யப்படும்.<br><br>13) எக்காரணத்தைக் கொண்டும் உரிமையாணை தொகையில் எந்த பாகத்தையாவது தள்ளுபடி செய்யும்படி கேட்கவும் இந்த அறிக்கையில் வரையறுத்தியிருக்கும் விகிதத்திற்கும் கூடுதலாக வசூலித்துக் கொள்ள உரிமை அளிக்கும்படி கேட்கவும் உரிமையாணை பெற்றவருக்கு உரிமை இல்லை. மேலும் உரிமையாணைதாரருக்கு ஒப்படைக்கப்பட்ட கட்டிடங்களை இலாகா மூலம் பராமரிப்பு செய்வதினாலாவது அல்லது அவைகளை சீர் செய்து அல்லது அபிவிருத்தி செய்வதினாலாவது ஏதாவது தற்காலிக இடைஞ்சல் ஏற்பட்டால் அதற்காக நஷ்ட ஈடு கேட்க உரிமை பெற்றவருக்கு உரிமையில்லை.<br><br>14) உரிமையாணை ஒப்புக்கொண்டவர் உரிமையாணை காலம் முழுவதும் அனுபவிக்காமல் உரிமையாணையினை தள்ளுபடி செய்து கோர உரிமையாணைதாரருக்கு உரிமையில்லை.<br><br>15) உரிமையாணை பெற்றவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட கட்டிடங்களிலும், சொத்துகளிலும் எவ்வித மாற்றம் செய்யவோ திருத்தி அமைக்கவோ அல்லது கட்டிடம் கட்டவோ உரிமையாணை பெற்றவர்களுக்கு எவ்வித உரிமையுமில்லை. உரிமத்துக்கு விடப்பட்ட இடங்களில் உள்ள காலி இடங்களில் நகராட்சி கட்டிட கடைகள்கட்டவோ அல்லது வேறு உபயோகத்திற்கு பயன்படுத்தவோ செய்ய நேரிட்டால் மேற்படி ஏலம் எடுத்தவர்கள் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கக்கூடாது. அதற்காக எந்தவித நஷ்டஈடும் கோர உரிமையாணைதாரருக்கு உரிமையில்லை.<br><br>16) உரிமத்துக்கு விடப்பட்ட நகராட்சிக்குச் சொந்தமான தினசரி மார்க்கெட் மற்றும் இதர இடங்களில் இந்நகராட்சி நிர்வாக அதிகாரி அவர்கள் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் எந்தப்பொருளும் வைக்கக்கூடாது என்றும் அல்லது எந்த ஒரு குறிப்பிட்ட பொருளும் விற்கக்கூடாது என்றும் அந்த இடம் காலியாக வைக்கப்படவேண்டும் என்றும் தெரியப்படுத்தினால் உரிமையாணைதாரர் மேற்படி இடத்தில் எந்த பொருளும் வைக்காமலும் அல்லது விற்பனை செய்யாமலும் பார்த்துக் கொள்ள வேண்டியது உரிமையாணைதாரரின் பொறுப்பாகும். இது விஷயத்தில் ஆணையரின் தீர்ப்பே முடிவானதாகும். உரிமையாணைதாரரையும் கடைக்காரர்களையும் விற்பனைக்கு கொண்டு வருபவர்களையும் கட்டுப்படுத்துவதும் நகராட்சிக்கு உரிமை உண்டு.<br><br>17) உரிமையாணையின் கீழ் ஒப்படைக்கப்பட்ட சொத்து முழுவதையுமாவது அல்லது அதன் ஒரு பாகத்தையாவது | |

ஒப்பந்தகாலம் முடிவு பெறுமுன் எந்த சமயத்திலாவது நகர்மன்ற அல்லது பொதுக்காரியங்களுக்கு வேண்டியிருப்பதாக நகர்மன்றம் கோரி, அவைகளை நகராட்சி வசம் திருப்பிக் கொடுத்தால் அவ்விதம் உரிமையாணையை அனுபவிக்க முடியாமல் போகும் காலத்திற்கு நகர்மன்றத்தால் நிர்ணயிக்கப்படும் கால விகிதாச்சார உரிமையாணைத் தொகையை தள்ளுபடி அல்லது நஷ்டாஈடு பெற்றுக் கொள்ள உரிமையாணை பெற்றவர் கட்டுப்பட்டவராவார்கள். இது விஷயத்தில் நகர்மன்றம் எடுக்கும் முடிவே இறுதியானதாகும்.

18) மன்றத்தின் எழுத்து மூலமான உத்திரவை முன்னதாகப் பெறாமல் உரிமையாணையை பெற்றவர் உரிமையாணையை இன்னொருவருக்கு மாற்றவாவது அல்லது முன் உரிமையாணைக்கு விடவாவது அனுமதிக்கப்படமாட்டார்கள். அப்படி அந்த உரிமையாணை ஸ்தலங்கள் உரிமையாணைக்கு கொடுத்தால் ஏலதாரர் கட்டியிருக்கும் டேவணித்தொகையை மன்றத்துக்கு ஆதாயமாக்கி கொள்வதுடன் உரிமையாணையை ரத்து செய்து அந்த இனம் இந்த உரிமையாணைப் பெற்றவர் சொந்தப் பொறுப்பில் மறுஏலம் விடப்படும். இதனால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் இவரே பூரண பொறுப்பாளியாவதுடன் இந்த நஷ்டங்களை ஈடுசெய்யவும் கட்டுப்பட்டவராவார்.

19) உரிமையாணை பெற்றவர் குறித்த நாளில் உரிமையாணைத்தொகை செலுத்தத்தவறினால் இதில் குறிப்பிட்ட எந்த ஒரு நிபந்தனைப்படியும் உரிமையாணைதாரர் நடக்கத் தவறினாலும் உரிமையாணைதாரருக்கு எந்தவித முன் அறிவிப்பு நோட்டீஸ் கொடுக்காமல் சம்மந்தப்பட்ட கட்டிடத்தில் இணைக்கப்பட்டுள்ள மின் இணைப்பைத் துண்டித்து மின் சப்ளையை நிறுத்தவோ உரிமையாணைதாரரையும் அவர் பொருட்களை உரிமையாணை ஸ்தலத்திலிருந்து அப்புறப்படுத்தி இடத்தை பூட்டி வைக்கவோ ஆணையருக்கு அதிகாரம் உண்டு. இதனால் உரிமையாணைதாரர் தொழில் செய்வதில் ஏற்படும் இடையூறுகளுககும் நஷ்டங்களுக்கும் நகராட்சி பொறுப்பல்ல.

20) உரிமையாணை இடத்தில் எவ்வித பிராணிகளையும் கட்டவோ, வளர்க்கவோ கண்டிப்பாக அனுமதிக்கக்கூடாது. இதை மீறும் உரிமையாணைதாரருக்கு ஆணையர் அவர்காளால் அபராதம் விதிக்க அதிகாரம் உண்டு.

21) உரிமையாணைக்கு விடப்பட்ட இனங்களில் இந்த அறிவிப்பில் கண்டுள்ள விகிதங்களுக்கு மேல் கட்டணம் கண்டிப்பாய் வசூலிக்கக்கூடாது. மேற்படி கட்டணங்களை வசூலிக்க அச்சு பற்றுச்சீட்டு கொடுக்க வேண்டும். அச்சுபற்றுச்சுட்டுப் புத்தகங்கள் ஒற்றைச்சீட்டு முறையில் அச்சடிக்க வேண்டும். அச்சுப்பற்றுச்சீட்டுகளில் எண்கள் 1 முதல் ஆரம்பித்து தொடராக (ஒவ்வொரு வித கட்டணத்திற்கும் தனித்தனி நிறமுள்ள டிக்கெட்டுகளாக அச்சடிக்க வேண்டும்) வரும்படி அச்சடிக்கப்பட வேண்டும். பற்றுச் சீட்டுகளை பயன்படுத்தும்முன் நகராட்சி அலுவலகத்திற்கு கொண்டு வந்து நகர் மன்றத்தின் முத்திரையைப் போட்டுக்கொள்ளவேண்டும். நகர்மன்றத்தின் முத்திரையை போட்டுக் கொள்ளாமல் சீட்டுக்களை வழங்கும் உரிமையாணைதாரர்கள் பேரில் கடும் நடவடிக்கை எடுத்து அவர்களது விளக்கம் பெறாமலே அம்மாதிரி கட்டுப்பாட்டிற்கு மீறி அவர்கள் செய்யும் குற்றத்திற்கு ரூ.1,000/—க்கு குறையாமல் அபராதம் விதிக்கப்படும். ஒவ்வொரு நாளும் வசூல் செய்யும்

| | | |
|---|---|---|
| | கட்டணத்திற்கு கணக்கு விபரம் சரியாக எழுதி வைத்துக் கொள்ளவேண்டும். அக்கணக்குகளை பரிசீலனை செய்ய ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற எந்த அலுவலருக்கும் உரிமை உண்டு. அப்படி பரிசீலனை செய்ய அனுமதிக்க உரிமைதாரர் கட்டுப்பட்டவராவார்.<br><br>22) உரிமையாணை காலத்தில் உரிமையாணை பெற்றவர் பிறர் பெயரிலாவது அல்லது பிறர் எவரும் உரிமையாணை பெற்றவர் பெயரிலாவது வழக்குகள் தொடர்ந்தால் அவற்றிற்காக ஏற்படும் பொருள் செலவிற்கு யாதொரு பகுதியும் நகராட்சி ஏற்றுக்கொள்ள முடியாததுடன் நகராட்சி எவ்விதத்திலும் இதற்கு பொறுப்பேற்காது.<br><br>23) உரிமையாணை காலத்தில் உரிமையாணைக்கு விடப்பட்டுள்ள இடங்களில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்ட அவ்வப்போது உரிமையாணைப் பெற்றவர் காவல் துறை மூலம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இதில் தவறுவார்களேயானால் சட்டப்படி தக்க நடவடிக்கை அவர்கள் பெயரில் நகராட்சியால் எடுக்கப்படும்.<br><br>24) உரிமையாணை காலத்தில் இந்த ஏல நிபந்தனைகளிலுள்ள இனங்கள் அரசினர் அல்லது நகராட்சியால் மாற்றப்பட்டாலும் அல்லது எங்கு இயங்கினாலும் உரிமையாணைதாரர் அங்கு இதில் கண்டுள்ள கட்டணங்களையே எடுத்துக் கொள்ள வேண்டியது. அதற்காக நகராட்சியிலிருந்து எவ்வித நஷ்டஈடு கோர உரிமையாணைதாரருக்கு உரிமை இல்லை.<br><br>25) உரிமையாணை ஸ்தலத்தில் உரிமையாணைதாரர் தன்னால் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள சிப்பந்திகள் ஏஜெண்டுகள் முதலானவர்கள் பெயர்கள் அவ்வப்போது ஆணையருக்கு தெரிவிக்க வேண்டும். அவர்கள் ஒழுங்காக நடக்கத்தவறிய காரணத்திற்காகிலும், வேறு எந்த காரணத்திற்காகிலும் உரிமையாணைக் காலத்தில் அந்த சிப்பந்திகளை வேலைகளிலிருந்து நீக்கிவிட வேண்டும். ஆணையரின் எழுத்துமூலமாக முன் அனுமதி இல்லாமல் மறுபடியும் அவர்களை அந்த வேலையில் வைத்துக்கொள்ளக்கூடாது. மேலும் மேற்குறிப்பிட்ட சிப்பந்திகள் செய்யும் தவறுக்கு உரிமையாணைதாரரே பொறுப்பேற்க வேண்டும்.<br><br>26) உரிமையாணைதாரருக்குக் கொடுக்கப்படும் அறிக்கைகள், குறிப்பாணைகள் அல்லது உத்தரவுகள் அவர் உரிமம் வாசஸ்தலத்திற்கு அல்லது தொழில் செய்யுமிடத்திற்கு அனுப்பப்பட்டால் அல்லது மேற்படி இடத்தில் போடப்பட்டால் அல்லது மேற்படி இடத்தில் வேலை செய்பவரிடமும் கொடுத்தாலோ அல்லது உரிமையாணை இடத்தில் ஒட்டி சார்வு செய்தாலோ அவரிடம் அது சரியான முறையில் சார்வு செய்யப்பட்டதாக கருதப்படும்.<br><br>27) இந்த நிபந்தனைகள் நகர்மன்றத்துடன் செய்து கொள்ளப்படும் எல்லா உரிமையாணை பெற்றவர்களுக்கும் லைசென்ஸ்தாரர்களுக்கும் செல்லத்தக்கதாய் இருப்பதுடன் உரிமையாணைக்கு இச்சரத்துக்கள் யாவும் பிரிக்கப்படாத நிபந்தனைகளாக கருதப்படுவதால் அவைகளில் நகல் உரிமையாணை ஒப்பந்தப்பத்திரம் அல்லது உடன்படிக்கையுடன் சேர்க்க வேண்டியது அவசியம் ஆகாது. | |

| | | |
|---|---|---|
| | 28) குத்தகைக்கு விடப்பட்ட இனங்களுக்கு நிலவாடகை அரசுக்கு செலுத்த வேண்டியிருந்தால் மேற்கண்ட தொகையை ஆணையர் அவர்கள் உத்திரவிடப்பட்டவுடன் குத்தகைதாரர் நகராட்சி அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.<br>29) ஆணையர் அவர்களுக்கு அல்லது அவரது நகராட்சி அலுவலர்களுக்கும் நிர்வாகத்தின் அவசியத்தை முன்னிட்டு அப்போதைக்கப்போது கொடுக்கும் உத்தரவுகளின்படி நடந்து வர உரிமையாணைதாரர் கட்டுப்பட்டவராவார்.<br>30) தொடர்ந்து வேண்டுமென்றே சிறப்பு அல்லது பொதுக்கட்டுப்பாடுகளை உரிமையாணைதாரர் மீறுவதாக தெரியவந்தால் உரிமையாணையை ரத்து செய்ய மன்றத்திற்கு சிபாரிசு செய்யப்படும்.<br>31) ஏல அறிவிப்பு அல்லது ஒப்பந்தப்பத்திரத்தில் இருக்கும் வார்த்தைகளுக்கு அல்லது கட்டுப்பாடுகளுக்கு நகராட்சி ஆணையரால் கொடுக்கப்படும் விளக்கமே முடிவானதாகும்.<br>32) உரிமையாணைதாரரிடம் ஒப்புவிக்கப்படும் சொத்துக்கள் முழுவதையும் உரிமையாணை காலம் முடிவு பெற்றவுடன் நல்ல நிலையில் ஒப்புவிக்கவேண்டும். உரிமையாணைதாரரிடம் ஒப்புவிக்கப்படும் சொத்துக்கள் முழுவதையும் உரிமையாணைதாரர் கவனிக்காததினால் சொத்துக்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால் உரிமையாணைதாரரே அதற்கு முழு பொறுப்பாளியாவார். உரிமையாணைதாரர் செய்கையிலாவது அல்லது தப்பிதத்தினாலாவது நகராட்சி சொத்துகளுக்கு ஏற்படும் சகல மராமத்து செலவுகளையும் உரிமையாணைதாரரிடம் வசூல் செய்யப்படும்.<br>33) ஆணையரின் உத்தரவின் பேரில் உரிமையாணை இடங்களில் மேஜிக், சர்க்கஸ் மற்றும் பொருட்காட்சி மற்றும் இதர நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டால் அதனல் கிடைக்கும் இதர வாடகையும் வருமானமும் நகராட்சிக்கே சொந்தமானது. இதில் எவ்வித பங்கும் கோர உரிமையாணைதாரருக்கு உரிமையில்லை.<br>34) உரிமையாணை ஆணையர் அல்லது மேற்படியாரின் அலுவலர்கள் ஆகியோரின் மேற்பார்வை கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டதாகும்.<br>35) மார்க்கெட்டுகளிலும் ஏலம் விடப்படும் இதர உரிமையாணை இடங்களிலும் சேரும் சாணி, குப்பை முதலியவைகளை உரிமையாணைதாரருக்கு சொந்தமானதாகும். இவற்றினை அவர் தம் சொந்த செலவில் அகற்றிக் கொள்ள வேண்டியது.<br>36) உரிமையாணைதாரர்களிடம் ஒப்படைக்கப்பட்ட ஸ்தலங்களுக்கு வெளியே நீட்டிக் கொண்டிருக்கும்படி எந்த பொருட்களையும் வைக்கவோ அல்லது விற்கவோ கூடாது.<br>37) உரிமையாணைதாரர் தாம் வசூலிக்க அமைக்கப்பட்ட கட்டணவிகிதத்தை நோட்டீஸ் பலகையில் எழுதி அப்பலகையை எல்லோருக்கும் தெரியும்படியான இடத்தில் தொங்கவிட்டு பந்தோபஸ்தாக பாதுகாத்து வரவேண்டும். அந்த விகிதப்படி கட்டணங்களை வசூலிப்பது உரிமையாணைதாரரின் உரிமையும் பொறுப்பாகும். அந்தப்பணம் வசூலிக்க இயலாமல் போனால் | |

உரிமையாணைதாரரே தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டியது. அது சம்பந்தமாக உரிமையாணைதாரர் ஈடு கோர உரிமையில்லை.

38) மார்க்கெட்டுகள், வதை சாலைகள் மற்றும் இதர உரிமையாணை இடங்களில் யாதொருவிதமான விளம்பரங்களை மன்றத்தின் உத்திரவின்றி எழுதாமலும் ஒட்டப்படாமலும் உரிமையாணைதாரர் பார்த்துக்கொள்ளவேண்டும்.

39) மன்றத்தின் உத்தரவின்பேரில் மேற்படி இடங்களில் விளம்பரங்கள் செய்யப்படலாம். அப்படி செய்யப்படும் விளம்பரங்களுக்கு நகராட்சியால் கட்டணம் வசூலிக்கப்படும். இதில் பங்கு கேட்க உரிமையாணைதாரருக்கு உரிமையும் இல்லை.

40) உரிமையாணைதாரர் இந்த விளம்பரத்திலுள்ள ஏதாவதொரு நிபந்தனைப்படி நடக்கத் தவறினால் மேற்படியாரின் உரிமையாணையை உடனே ரத்து செய்யப்பட்டதாக கருதப்படும். அதனால் மன்றத்திற்கு ஏற்படும் நஷ்டத்தையும் மற்ற செலவுகளையும் உரிமையாணைதாரரால் கட்டப்பட்டிருக்கும் டேவணியிலிருந்தோ அல்லது மற்ற எந்தவகைத் தொகையிலிருந்தோ ஈடுசெய்து கொள்ள மன்றத்திற்கு உரிமையுண்டு. டேவணியாகக் கட்டியிருக்கும் தொகையை மன்றத்திற்கு சொந்தமாக்கிவிடக்கூடும். மேலே சொன்னபடி நிபந்தனைகளை அனுசரிக்காததற்கு டேவணியை சொந்தமாக்கிக்கொள்ளும் விஷயத்திலோ அல்லது பணத்தை உளவடைத்து கொள்ளவோ நகர்மன்றத்தின் தீர்மானமே முடிவானதாகும்.

41) இந்த பொது நிபந்தனைகளில் ஏதாவதொன்றையோஅல்லது குறிப்பிட்ட இனத்தின் கீழ் உள்ள நிபந்தனைகளில் ஏதாவதொன்றையோ உதாசீனம் செய்தால் அப்படி செய்யப்படும் ஒவ்வொரு தடவைக்கும் ரூ.500/–க்கு மேற்படாமல் உரிமையாணைதாரருக்கு அபராதம் விதிக்க ஆணையருக்கு அதிகாரம் உண்டு. இதைத்தவிர உரிமையாணையை ரத்து செய்யவும், இலாகா மூலம் நடத்தவும் மறுபடியும் ஏலம் விடவும் நகர்மன்றத்திற்கு உரிமை உண்டு. உரிமையாணையை ரத்து செய்யவும், இலாகா மூலம் நடத்தவும் மறுபடியும் ஏலம்விடவும் நகர்மன்றத்திற்கு உரிமை உண்டு. உரிமையாணையை ரத்து செய்வதாலும் மறுபடி ஏலம் விடுவதாலும் இலாகா மூலம் நடத்துவதாலும் ஏற்படும் நஷ்டங்களுக்கு உரிமையாணைதாரரே பூரண ஜவாப்தாரியாவார். ஆனால் மேலே சொன்னபடி மறு ஏலத்திலோ இலாகா மூலம் நடத்துவதினாலோ ஏற்படும் லாபத்தில் உரிமையாணைதாரர் எவ்வித உரிமையோ பங்கோ கேட்க உரிமையில்லை.

42) உரிமையாணைதாரரால் கட்டப்பட்டிருக்கும் டேவணியிலிருந்து விதிக்கப்படும் அபராதத்தின் முழுபாகத்தையோ அல்லது ஒரு பாகத்தையோ ஈடு செய்து கொள்ளலாம். அப்படி ஈடு செய்து கொள்ளப்படும் தொகையை உத்தரவு கிடைத்த ஒரு வார கெடுவுக்குள் உரிமையாணைதாரர் மறுபடியும் டேவணியாகக் கட்டிவிட வேண்டும். தவறினால் மேற்படி தொகை உரிமையாணைத்தொகை பாக்கி வசூலிக்கப்படுவது போல் வசூலிக்கப்படும்.

43) உரிமையாணை சம்பந்தமாக ஏற்படும் பாக்கித் தொகையினை உரிமையாணைதாரருக்கு நகராட்சியில் இருந்து கிடைக்க வேண்டிய இதர எந்த தொகையிலிருந்தும் ஒப்புதல் எதுவுமின்றி ஈடுசெய்து கொள்ள ஆணையருக்கு பூரண அதிகாரம் உண்டு.

44) உரிமையாணைக்கு விடப்பட்ட கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள எல்லா மின்சார சாதனங்களும் நகராட்சியின் சொத்தாகவே இருக்கும். மேற்படி இணைப்பு கொடுப்பதற்கான டேவணியை உரிமைதாரரே கட்டுவதுடன் மின்சாரம் உபயோகிப்பதனால் ஆகக்கூடிய செலவுகளையும் உரிமையாணைதாரரே கட்டி வர கட்டுப்பட்டவராவார். மின்சார சட்டதிட்டங்களின் பேரில் உரிமையாணைதாரர் மேல் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேற்படி இடத்தில் உள்ள மின் இணைப்பு கண்டிப்பாய் உரிமையாணைதாரரின் பெயருக்கு தரப்பட மாட்டாது. இவ்விணைப்பு ஆணையர் பெயரிலேயே இருந்து வரும். உரிமையாணையை பொறுப்பேற்றதும் மின் இணைப்பு தனியே மனு செய்தால் மேலே சொன்ன தொகைகள் கட்டியபின் உரிமையாணை இடத்திற்கு மின் இணைப்பு கொடுக்கப்படும்.

45. மின்மீட்டர் கோளாறினாலோ அல்லது மின்சார விதிகளுக்குப் புறம்பாக குறைபாடுகள் ஏதாவது மின்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டால் அதனால் ஏற்படும் கஷ்டநஷ்டங்களுக்கு உரிமையாணைதாரர் முழுப்பொறுப்பாவார். மேலும் மின் இலாகாவால் விதிக்கப்படும் தண்டத்தீர்வைக்கு உரிமையாணைதாரர் முழுப்பொருப்பாவார். நகராட்சியானது எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

46) நகராட்சி உரிமையாணை இடங்களில் கூடுதலாகவோ அல்லது ஒரு பகுதிக்கோ இணைப்பு தேவைப்படும் பட்சத்தில் அந்தந்த உரிமையாணைதாரர்கள் அவருடைய சொந்தப் பொறுப்பிலும் செலவிலும் மின்வாரியம் மூலம் அமைத்துக்கொடுக்கப்படும். அவ்வாறு பெறப்படும் மின் இணைப்பு ஆணையர் பெயரில் தான் கொடுக்கப்படும். அவ்வாறு பெறப்படும் ஒவ்வொரு மின் இணைப்பிற்கும் ரூ.1,000/– வைப்புத்தொகையாக நகராட்சி கருவூலத்தில் செலுத்த வேண்டும். மின்வாரியத்திற்கு செலுத்தப்படவேண்டிய எல்லா தொகைகளையும் உரிமையாணைதாரர் செலுத்திக்கொள்ள வேண்டும். மேற்படி மின் இணைப்பு கொடுப்பது குறித்து ஆணையரின் முடிவுப்படி நடக்க உரிமையாணைதாரர் கடமைப்பட்டவராவார்.

47) உரிமையாணை இடத்தில் நகராட்சியால் பொறுத்தப்பட்டுள்ள மின்சார விளக்குகள் இதர விளக்குகள் இதர தளவாட சாமான்களின் பாதுகாப்பிற்கு உரிமையாணைதாரரே பொறுப்பாளியாவார். இவைகளில் ஏதேனும் குறைவாகத் தெரியவந்தால் அதை உடனடியாகத் தரவேண்டியது உரிமையாணைதாரரின் பொறுப்பாகும். தவறும் பட்சத்தில் மேற்படி பொருளின் கிரயத்தை நகராட்சி கருவூலத்தில் செலுத்த உரிமையாணைதாரர் கட்டுப்பட்டவராவார். அப்படியும் கட்ட தவறினால் அவர்கட்டிய டேவணித் தொகையிலிருந்து மேற்படி தொகை பிடித்தம் செய்யப்படும்.

48) நகராட்சி உரிமையாணை இனங்களுக்கு உரிமைத்தொகை செலுத்தப்படாமலிருந்தால் உரிமையாணைதாரருக்கு நோட்டீஸ் கொடுக்கப்படாமலேயே ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவராவது உரிமையாணை இடம்

| | | |
|---|---|---|
| | பூட்டப்பட்டிருந்தாலும் பூட்டை உடைத்தாவது அல்லது வேறுவிதமாவது உரிமையாணை இடத்தில் நுழைந்து அதனுள் உள்ள சொத்துக்களை கைப்பற்றிக்கொண்டு அதனை பொது ஏலத்தில் விட்டு கிடைக்கும் தொகையை செலுத்தப்படாத உரிமைத்தொகைக்கு ஈடுசெய்து வசூல் செய்ய ஆணையருக்கு அதிகாரம் உண்டு. அவ்வாறு கைப்பற்றியதனால் ஏற்படும் செலவுகள் அல்லது நஷ்டத்தை ஏல ஷரத்துக்களின்படி நடத்தத்தவறிய உரிமையாணைதாரரிடமிருந்து வசூல் செய்யப்படும்.<br><br>49) சந்தைகள், பேருந்துநிலையம், ஆடுகள் வதை செய்யுமிடம் மற்றும் நகராட்சியின் இடங்களை உரிமைகாலத்தில் இடைக்காலத்திலோ அல்லது காலத்தில் ஒரு பகுதியிலோ அல்லது வேறு இடத்திற்கு மாற்றப்பட்டால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு நகராட்சி பொறுப்பாகாது. உரிமைதாரர்கள் எவ்வித நஷ்டங்களும் கோர முடியாது. அவர்கள் சம்மந்தப்பட்ட உரிமத்தை அனுபவித்த காலம் வரையில் உரிமையாணைத்தொகை வசூல் செய்து கொள்ளலாம். சந்தைகள் அல்லது பேருந்து நிலைய கடைகள் மற்றும் இதர இனங்களை மாற்றியமைக்கும் போது புதிய இடத்தில் மேலே கண்ட பழைய உரிமைதாரர் அங்கு அவருக்கு முன்னுரிமை அளித்து பாத்தியம் கொண்டாட உரிமையில்லை. மாற்றியமைக்கப்பட்ட இடத்தில் அங்குள்ள இனங்களை பொது ஏலத்தில் விடப்பட்டுதான் உரிமத்திற்கு அளிக்கப்படும். அவ்வாறு ஏலம் விடப்படும் இனங்கள் மறுபடியும் அளவானது 2015 மார்ச் வரையிலான காலத்திற்கு மட்டுமே.<br><br>50) இந்த நிபந்தனைகளின் நிர்வாக அதிகாரி அல்லது ஆணையர் என்னும் பதம் இராமநாதபுரம் நகராட்சி ஆணையர் அல்லது அவரின் உத்தரவுப்படி அதிகாரம் பெற்ற அதிகாரியையே குறிக்கும்.<br><br>51) இந்த விளம்பரத்தில் கண்டுள்ள யாதொரு நிபந்தனைகள், சட்டதிட்டங்கள், விதிகள் அரசு ஆணைகள், இதர ஆணைகள் இவை அனைத்தும் சம்பந்தமாகவும் ஆவணங்கள் சம்பந்தமாகவும் ஆணையர் கொடுக்கும் விளக்கமே முடிவானது.<br><br>52) உரிமையாணையை உள் வாடகைக்கு விடப்பட்டது நகராட்சி கவனத்திற்கு தெரியவந்தால் அளிக்கப்பட்ட உரிமையாணையை ரத்து செய்யப்படும்.<br><br>53) ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் ஏலத்தின்போது செல்போன் கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது.<br><br>54) ஏல அறிவிப்பில் அல்லது ஒப்பந்தப்பத்திரத்தில் இருக்கும் வார்த்தைகளுக்கு அல்லது கட்டுப்பாடுகளுக்கு ஆணையர் கொடுக்கும் விளக்கமே இறுதியானது.<br><br>55) ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்பவர்கள் ஏல அறிக்கையில் கண்ட சரத்துகளை நன்குபடித்து அறிந்து கொண்டதாகக் கருதப்படுவார்கள். | |

**<u>சிறப்பு நிபந்தனைகள்:–</u>**

**<u>நகராட்சி எல்லைக்குள் கீரைக்கார ஊரணி கிழக்கு தெரு (உழவர் சந்தை அருகில்) புதிதாக கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நவீன மீன் விற்பனைக் கூடத்திற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (56 கடைகள்)</u>**

| | | |
|---|---|---|
| 1. | திறந்தவெளி கடை 1க்கு | ரூ.100/– |
| 2. | தரையில் வைத்து வியாபாரம் செய்பவர்களிடம் (10 ச.அடி வரை மட்டும்) வசூல் செய்ய வேண்டிய தினசரிக் கட்டணம் | ரூ.50/– |
| 3. | மீன் மார்க்கெட்டிற்கு உள்ள வரும் லாரி 1–க்கு | ரூ. 100/– |
| 4. | மீன் மார்க்கெட்டிற்கு உள்ள வரும் மினி லாரி 1–க்கு<br>இதர வகை வண்டிகள் | ரூ. 50/–<br>ரூ.25/– |
| | ஒரு நாள் என்பது நடு இரவில் தொடங்கி நடு இரவில் முடியும் 24 மணி நேரமாகும். | |
| 5. | மேலே குறிப்பிட்டுள்ளபடி கட்டணம் வசூல் செய்ய வேண்டும். அப்படி வசூல் செய்து கொள்ளும் கட்டணத்திற்கு உரிமையாணைதாரர் தன் சொந்த செலவிலேயே இரசீது அச்சடித்து அலுவலக முத்திரை பெற்றுக் கொடுக்க வேண்டும். பிரதிமாதம் சொந்த செலவில் அச்சடித்த இரசீதுகளை நகராட்சி வருவாய் ஆய்வர் மூலமாக சம்பந்தப்பட்ட பிரிவு எழுத்தரிடம் இரசீது வரிசை எண் குறிப்பிட்டு ஒப்புதல் பெற்று பயன்படுத்த வேண்டும். அலுவலக முத்திரை இல்லாத இரசீதுகளை கொடுத்து கட்டணம் வசூல் செய்யப்பட்டு ஆணையரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால் அப்படி வசூல் செய்யப்பட்ட நாள் ஒன்றுக்கு ரூ.50/– வரை ஆணையரின் ஊர்ஜிதப்படி அபராதம் விதித்து வசூல் செய்யப்படும். மேலும் இக்குற்றம் தொடருமாயின் ஏல நிபந்தனைகளை மீறியதாகக் கருதி உரிமையாணையை ரத்துச் செய்யப்படுவதோடு அதனால் நகராட்சிக்கு ஏற்படும் சகல இழப்புகளுக்கும் உரிமையாணைதாரர் பொறுப்பாவார். எக்காரணம் கொண்டும் நிர்ணயம் செய்யப்பட்ட தொகைக்கு மேல் வசூல் செய்யக்கூடாது. | |
| 6. | தினசரி அங்காடி எந்தவித மாற்றமும் தற்காலிகமாகக்கூட செய்யக்கூடாது. | |
| 7. | தினசரி அங்காடி கட்டணம் வசூலிக்கும் உரிமை ஒப்படைக்கும் நாள் முதல் 2023ம் ஆண்டு முடிய மூன்றாண்டுகளுக்கு மட்டுமே ஆகும். எக்காரணத்தைக் கொண்டும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் நீட்டிக்கப்படமாட்டாது. | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 8. | தினசரி அங்காடி ஒப்படைக்கப்பட்டதைப்போல் அதே நிலையில் 2023ம் ஆண்டு ஏலம் முடிவடையும் நாளன்று இரவு 12 மணிக்கு நகராட்சியில் ஒப்படைக்க வேண்டும். கட்டிடங்ளில் சேதம் உண்டானால் உரிமக் காலத்தில் அதற்கான மராமத்துக் கட்டணம் உரிமையாணைதாரரிடமிருந்து வசூல் செய்யப்படும். | | |
| | | 9. | சந்தையை உரிமைதாரர்கள் தன் சொந்த செலவிலேயே குத்தகை காலம் முழுவதும் துப்புரவாகவும் சுகாதார முறைப்படியும் வைத்துக் கொள்ள வேண்டும். சுத்தம் செய்து சேகரித்த குப்பை கழிவுகளை மக்கும் குப்பை தனியாகவும் மக்காத குப்பை தனியாகவும் பிரித்து தமது சொந்த செலவில் உரிய வழிமுறைகளை பின்பற்றி உரமாக்கப்பட வேண்டும். | | |
| | | 10. | நகர்மன்றத்தின் முன்அனுமதி பெற்றிருந்தாலொழிய எவ்வித ஆக்கிரமிப்புகளோ விளம்பரங்களோ செய்யக்கூடாது. | | |
| | | 11. | தினசரி அங்காடி வசூல் செய்ய வேண்டிய கட்டண விகிதங்கள் அடங்கிய விளம்பரப் பலகை ஒன்று பொதுமக்கள் வியாபாரிகள் பார்வைக்கு எளிதில் தெரிந்து கொள்ளும் இடத்தில் உரிமையாணைதாரர் தன் சொந்த செலவில் வைத்து உரிமையாணைக் காலம் முழுவதும் பாதுகாத்து வரவேண்டும். அப்படி வைக்கத் தவறினால் நகர்மன்றத்தினரால் மேற்படி பலகை பொருத்தப்பட்டு அதற்கான செலவுகள் உரிமையாணைதாரரிடமிருந்து வசூல் செய்யப்படும். | | |
| | | 12. | பொது வேலை நிறுத்தம், கலகம், தீ விபத்து, தொத்து வியாதி அல்லது மனித சக்திக்கும் மீறிய இதர காரணங்களால் நாட்சந்தையை தற்காலிகமாக மூடும்படி நேர்ந்தால் அதற்கான யாதொரு நஷ்டஈடு, உரிம கழிவு கோர உரிமையாணைதாரருக்கு உரிமை கிடையாது. நஷ்ட ஈடும் வழங்கப்படமாட்டாது. | | |
| | | 13. | எந்த நேரத்திலும் பாக்கியுள்ள உரிமக் காலத்திற்கு உண்டான உரிமத் தொகையை வஜா செய்து உரிமையை தள்ளுபடி செய்ய நகர்மன்றத்திற்கு அதிகாரம் உண்டு. | | |
| | | 14. | உரிமையாணை காலத்தில் உரிமையாணைதாரருக்கும், வியாபாரிகளுக்கும் இடையில் ஏதாவது தாவா ஏற்பட்டால் அதில் ஆணையரின் தீர்ப்பே முடிவானதாகும். | | |
| | | 15. | நாட்சந்தையைச் சுற்றி ஒவ்வொரு பக்கமும் 50 மீட்டர் வரை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 270ன்கீழ் கட்டணம் வசூலிக்கக் கூடாது. | | |

| | |
|---|---|
| 16. | நாட்சந்தை மற்றும் கடைகளுக்கான மின்கட்டணத்தை உரிமைதாரரே மின்வாரியத்தில் நேரடியாக செலுத்திக் கொள்ளவேண்டும். அதற்கான மின்கட்டணத்தை அளவீட்டுப்படி உரிமைதாரர் தனது சொந்தப் பொறுப்பில் வியாபாரிகளிடமிருந்து வசூல் செய்து கொள்ள வேண்டும். |
| 17. | மின்கட்டணத்திற்காக உரிமைதாரர் நகராட்சியில் ரூ.5,000/–ஐ கூடுதல் பொறுப்புத் தொகையாக செலுத்த வேண்டும். உரிமைதாரருக்கு இத்தொகை உரிமைக் காலம் முழுமைக்கான மின்கட்டணத்தை உரிமைதாரர் மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டும். |
| 18. | தினசரி வாடகையை முறையாக செலுத்தத் தவறிய வியாபாரிகளை மேற்படி திறந்தவெளி கடைகளிலிருந்தோ அல்லது நாளங்காடி கடைகளிலிருந்தோ அவர்களை அப்புறப்படுத்தி புதிய வியாபாரிகளை அனுமதிக்க உரிமைதாரருக்கு உரிமை உண்டு. |
| 19. | அபிவிருத்தியின் பொருட்டு உரிமைதாரருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு யாதொரு நஷ்டஈடும் கோர உரிமைதாரருக்கு உரிமையில்லை. |
| 20. | நாட்சந்தை வளவின்மீது வருவாய் துறையினரால் விதிக்கப்படும் நில வாடகை இனிமேல் விதிக்கக்கூடிய எல்லா நகராட்சி வரிகளையும் உரிமைதாரர் செலுத்த வேண்டும். |
| 21. | குத்தகை உரிமையை குத்தகைதாரர் வேறு எவருக்கும் உள்குத்தகைக்கு விடப்பட்டால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி குத்தகை இரத்து செய்யப்படுவதோடு மறு ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்படும். மறு ஏலம் விடப்படும் வரை நகராட்சிக்கு ஏற்படும் இழப்புகளுக்கு சம்பந்தப்பட்ட குத்தகைதாரர் அல்லது உரிமைதாரரை முழுப்பொறுப்பாக்கி அவருடைய வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும் இனி வரும் 9 வருடங்களுக்கு நகராட்சி குத்தகை இனங்களில் பங்கேற்க அனுமதி வழங்கப்படமாட்டாது. |
| 22. | நகராட்சி ஆணையரால் அவ்வப்போது ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளின்படி உரிமையாணைதாரர் நடந்து கொள்ள வேண்டும். |

<u>**அலுவலக குறிப்பு:–**</u> 1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்கண்ட குத்தகை பொது மற்றும் சிறப்பு நிப்நதனைகளை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்குரிய செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2764/2020/அ2)

| | | |
|---|---|---|
| | **தீர்மானம் எண்.1270– அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.** | |
| பொருள் எண்..16 | இராமநாதபுரம் நகராட்சி, பொது நிதி 2020–21, தேசிய மீன்வளர்ச்சி வாரிய நிதி உதவியுடன் கீரைக்கார ஊரணி கிழக்குத் தெருவில் ரூ.95.00 லட்சம் மதிப்பீட்டில் நவீன மீன் அங்காடி கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வரும் நிலையில் உள்ளது. இந்நவீன மீன் அங்காடி முன்பகுதி, பின்பகுதி பக்கவாட்டில் Paver Block தளம் பதிப்பதற்கான வழிவகை மூல மதிப்பீட்டில் இல்லாததால் இத்திட்டப் பணியில் செயல்படுத்த இயலவில்லை.<br>மேலும் அப்பகுதிகளில் Paver Block தளம் அமைத்தால் தான் வாகனப் பயன்பாடு, பொதுமக்கள் எளிதாக சென்று வர முடியும். எனவே இந்நவீன மீன் அங்காடியினை சுற்றி Paver Block தளம் அமைக்க அவசியம் ஏற்படுகின்றது. எனவே மேற்கண்ட நவீன மீன் அங்காடி கட்டிடத்தினை சுற்றி வளாகத்திற்குள் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.11.00/- லட்சத்திற்கு வருவாய் நிதியின் கீழ் பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.<br>**அலுவலக குறிப்பு–**மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3360/2020/இ1<br>**தீர்மானம் எண்.1271– அலுவலகக் குறிப்பு ஏற்பு.** | **தீர்மானம் எண்.1271**<br>**அலுவலகக்குறிப்பு ஏற்பு** |
| பொருள் எண்..17 | அரசாணை எண்.298, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.02.09.2020 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.8763/2020/ஆர்2, நாள்.29.09.2020–ல் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளின்படியும், இந்நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று (COVID-19)தடுப்பு பணி காரணமாக பொது ஊரடங்கு காலத்தில் இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களான தினசரி சந்தை, வாரச்சந்தை, கட்டண கழிப்பிடங்கள், வாகனம் நிறுத்தம் மற்றும் மாத வாடகை கடைகள் 01.04.2020 முதல் 31.05.2020 முடிய செயல்படவில்லை. அதன்அடிப்படையில் இணைப்பில் கண்ட படிவம் 1 மற்றும் 2–ல் உள்ள குத்தகை இனங்கள் மற்றும் மாத வாடகை கடைகளுக்கு 01.04.2020 முதல் 31.05.2020 வரையிலான காலங்களுக்கு வாடகையினை கணிணியில் நீக்கம் செய்ய மன்றம் அனுமதி வேண்டப்படுகின்றது. | **தீர்மானம் எண்.1272**<br>**அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.** |

**அரசாணை எண்.298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.02.092020ன்படி, குத்தகை 9 ஆண்டு இனங்களில் நீக்கம் செய்ய வேண்டிய இரண்டு மாத வாடகை விபரம்:—**

| வ. எண் | வரி விதிப்பு எண் | குத்தகைதாரரின் பெயர் | பகுதி | ஒரு மாத வாடகை (ரூ) | ஒரு வருட வாடகை (ரூ) | அரசாணையின் படி நீக்கம் செய்ய வேண்டிய இரண்டு மாத வாடகை தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| (i) | (ii) | (iii) | (iv) | (v) | (vi) | (vii) |
| 1. | 5002 | எம்.பாஸ்கரன் | அண்ணா பேருந்து நிலைய கடைகள் | 5313 | 63756 | 10626 |
| 2. | 5003 | மகதுஅலாவுதீன் | | 5313 | 63756 | 10626 |
| 3. | 5004 | எம்.எஸ்.ஜெய்னுலாபு தீன் | | 6086 | 73032 | 12172 |
| 4. | 5005 | செல்வேந்திரன் | | 5313 | 63756 | 10626 |
| 5. | 5006 | ஹபீப்ரஹ்மான் | | 5313 | 63756 | 10626 |
| 6. | 5007 | அமீர்ச்சுல்த்தான் | | 5313 | 63756 | 10626 |
| 7. | 5008 | எம்.எஸ்.ஜெய்னுலாபு தீன் | | 3623 | 43476 | 7246 |
| 8. | 5009 | ஜி.கதிரவன் | அண்ணா பள்ளிக்கூட கடைகள் | 5316 | 63792 | 10632 |
| 9. | 5010 | கணேசன் | | 5316 | 63792 | 10632 |
| 10. | 5011 | எஸ்.கணேசன் | | 5316 | 63792 | 10632 |
| 11. | 5012 | எம்.ஜெயசீலன் | | 5316 | 63792 | 10632 |
| 12. | 5013 | டி,ரவி | | 5316 | 63792 | 10632 |
| 13. | 5014 | கே.சண்முகம் | | 5316 | 63792 | 10632 |
| 14. | 5015 | ஆர்.கார்த்திகேயன் | | 5316 | 63792 | 10632 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 15. | 5016 | நாகுபிள்ளை | | 5316 | 63792 | 10632 | | |
| | | 16. | 5017 | கே.தங்கம் | இரயில்வே பீடர் ரோடு கடைகள் | 2974 | 35688 | 5948 | | |
| | | 17. | 5018 | எஸ்.குலாம் | | 2467 | 29604 | 4934 | | |
| | | 18. | 5021 | என்.ராஜா | பாண்டிக்கண்மாய் சாமி கிழக்கு தெரு | 1395 | 16740 | 2790 | | |
| | | 19. | 5023 | எஸ்.சுல்த்தான் | ஐடிஎஸ்.எம்.டி வாரச்சந்தை முன்புற கடைகள் | 4125 | 49500 | 8250 | | |
| | | 20. | 5024 | கே.செய்யதுமைதீன் | | 4125 | 49500 | 8250 | | |
| | | 21. | 5025 | ஆர்.வருசை முகம்மது | | 4125 | 49500 | 8250 | | |
| | | 22. | 5026 | எம்.சாகுல்ஹமீது | | 4125 | 49500 | 8250 | | |
| | | 23. | 5027 | எஸ்.முகம்மது அலி | | 4125 | 49500 | 8250 | | |
| | | 24. | 5028 | ஜெய்லானி | | 4125 | 49500 | 8250 | | |
| | | 25. | 5029 | என்.இராமகிருணணன் | | 4125 | 49500 | 8250 | | |
| | | 26. | 5030 | என்.இராமகிருணணன் | | 4125 | 49500 | 8250 | | |
| | | 27. | 5031 | காதர் மைதீன் | | 4125 | 49500 | 8250 | | |
| | | 28. | 5032 | எம்.ஆர்.இராமமூர்த்தி | | 5927 | 71124 | 11854 | | |
| | | 29. | 5033 | செய்யது இஸ்மாயில் | | 4125 | 49500 | 8250 | | |
| | | 30. | 5034 | எஸ்.குருசாமி | அண்ணா பள்ளிக்கூட கிழக்கு பகுதி கடைகள் | 8096 | 97152 | 16192 | | |
| | | 31. | 5035 | எஸ்.வி.சுப்ரபமணியன் | | 8096 | 97152 | 16192 | | |
| | | 32. | 5036 | எஸ்.ஏழுமலை | | 8096 | 97152 | 16192 | | |
| | | 33. | 5037 | எஸ்.நல்லசேவுகன் | | 8096 | 97152 | 16192 | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 34. | 5038 | எஸ்.நாகராஜன் | | 8096 | 97152 | 16192 | | |
| | | 35. | 5039 | எம்.சிவசங்கர் | கிடா வெட்டி ஊரணி கடைகள் | 5694 | 68328 | 11388 | | |
| | | 36. | 5040 | எம்.அகிலா | | 5694 | 68328 | 11388 | | |
| | | 37. | 5041 | வி.மூர்த்தி | | 5694 | 68328 | 11388 | | |
| | | 38. | 5042 | எம்.கே.மாரியப்பன் | | 5694 | 68328 | 11388 | | |
| | | 39. | 5118 | எம்.மகேஸ்வரி | | 5694 | 68328 | 11388 | | |
| | | 40. | 5138 | கே.பைரம்கான் | | 5694 | 68328 | 11388 | | |
| | | 41. | 5045 | ஏ.பி.ஜே.இப்ராகிம் | புதிய பேருந்து நிலைய முன்புற கடைகள் | 5694 | 68328 | 11388 | | |
| | | 42. | 5046 | அப்துல்கலாம் | | 5694 | 68328 | 11388 | | |
| | | 43. | 5047 | வி.செல்வம் | | 5694 | 68328 | 11388 | | |
| | | 44. | 5048 | பி.காளீஸ்வரி | | 5694 | 68328 | 11388 | | |
| | | 45. | 5049 | எம்.ஸ்டாலின் ஜெயசந்திரன் | | 6647 | 79764 | 13294 | | |
| | | 46. | 5050 | எஸ்.கன்சுல்மகரிபா | | 5694 | 68328 | 11388 | | |
| | | 47. | 5051 | ஜி.நம்மாழ்வர் | | 34092 | 409104 | 68184 | | |
| | | 48. | 5052 | ஜி.நம்மாழ்வர் | | 34092 | 409104 | 68184 | | |
| | | 49. | 5053 | கே.வி.மணிகன்டன் | புதிய பேருந்து நிலைய உள்புற கடைகள் | 5726 | 68712 | 11452 | | |
| | | 50. | 5054 | எஸ்.சரவணகுமார் | | 5726 | 68712 | 11452 | | |
| | | 51. | 5055 | முஜிபுர்ரஹ்மான் | | 5726 | 68712 | 11452 | | |
| | | 52. | 5056 | எஸ்.சரவணகுமார் | | 5726 | 68712 | 11452 | | |
| | | 53. | 5057 | இராஜகுமரன் | | 5726 | 68712 | 11452 | | |
| | | 54. | 5058 | முகம்மது யாகூப் | | 5726 | 68712 | 11452 | | |
| | | 55. | 5059 | செந்தில்குமார் | | 5726 | 68712 | 11452 | | |
| | | 56. | **5060** | ஹமீதாபானு | | 5726 | 68712 | 11452 | | |
| | | 57. | 5061 | செய்யது | | 4189 | 50268 | 8378 | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | மனசீர்துல்லா | | | | | | |
| | | 58. | 5062 | செய்யது முகம்மது | | 4189 | 50268 | 8378 | | |
| | | 59. | 5063 | கே.பாலமுருகன் | | 1722 | 20664 | 3444 | | |
| | | 60. | 5064 | எஸ்.முனாஸ் | | 5200 | 62400 | 10400 | | |
| | | 61. | 5065 | ஆர்.டி,வசந்தா | | 3220 | 38640 | 6440 | | |
| | | 62. | 5066 | ஜமீர்கான் | | 3220 | 38640 | 6440 | | |
| | | 63. | 5067 | ஜி.மனோகரன் | | 3220 | 38640 | 6440 | | |
| | | 64. | 5068 | எஸ்.வி.சுப்ரபமணியன் | | 2962 | 35544 | 5924 | | |
| | | 65. | 5069 | சி.முருகேசன் | | 2540 | 30480 | 5080 | | |
| | | 66. | 5070 | சி.முருகேசன் | | 2540 | 30480 | 5080 | | |
| | | 67. | 5071 | கே.எம்.வெள்ளச்சாமி | | 4066 | 48792 | 8132 | | |
| | | 68. | 5072 | எம்.ஜனார்த்தனன் | | 4161 | 49932 | 8322 | | |
| | | 69. | 5073 | எஸ்.மாரியப்பன் | | 4066 | 48792 | 8132 | | |
| | | 70. | 5074 | கண்ணன் | | 7338 | 88056 | 14676 | | |
| | | 71. | 5075 | கே.குமாரவேல் | | 4208 | 50496 | 8416 | | |
| | | 72. | 5076 | ஜி.மனோகரன் | | 4970 | 59640 | 9940 | | |
| | | 73. | 5077 | என்.சேகர் | | 8369 | 100428 | 16738 | | |
| | | 74. | 5078 | விஜயகுமார் | | 4189 | 50268 | 8378 | | |
| | | 75. | 5079 | எஸ்.திருமுருகன் | | 4189 | 50268 | 8378 | | |
| | | 76. | 5080 | ஜி.செந்தில்குமார் | | 4302 | 51624 | 8604 | | |
| | | 77. | 5081 | ஜி.செந்தில்குமார் | | 4302 | 51624 | 8604 | | |
| | | 78. | 5082 | ஆர்.முத்துச்சாமி | | 4189 | 50268 | 8378 | | |
| | | 79. | 5083 | சி.முருகேசன் | | 4189 | 50268 | 8378 | | |
| | | 80. | 5084 | சி.முருகேசன் | | 4076 | 48912 | 8152 | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 81. | 5085 | என்.இராமகிருணணன் | | 9611 | 115332 | 19222 | | |
| | | 82. | 5086 | ஆர்.எஸ்.இராமமூர்த்தி | | 4336 | 52032 | 8672 | | |
| | | 83. | 5087 | எஸ்.செல்வம் | | 4336 | 52032 | 8672 | | |
| | | 84. | 5088 | ஆர்.எஸ்.இராமமூர்த்தி | | 4448 | 53376 | 8896 | | |
| | | 85. | 5089 | பி.இளங்கோவேலு | | 5641 | 67692 | 11282 | | |
| | | 86. | 5090 | இராமுதேவர் | | 4336 | 52032 | 8672 | | |
| | | 87. | 5099 | ஏ.கே.செந்தில்கணேஸ் | சாலைத் தெரு வணிக வளாகம் | 60691 | 728292 | 121382 | | |
| | | 88. | 5100 | எம்.ஏ.அப்துல் முனாப் | | 52024 | 624288 | 104048 | | |
| | | 89. | 5101 | என்.இராஜா | புதிய பேருந்து நிலைய கடைகள் | 5909 | 70908 | 11818 | | |
| | | 90. | 5102 | ஜே.சண்முகவள்ளி | | 2294 | 27528 | 4588 | | |
| | | 91. | 5103 | ஜே.சண்முகவள்ளி | | 2869 | 34428 | 5738 | | |
| | | 92. | 5105 | கே.இப்ராகிம் செய்து | | 8306 | 99672 | 16612 | | |
| | | 93. | 5107 | ஐ.ஹைதர் அலி | புதிய பேருந்து நிலைய காலியிடம் | 7440 | 89280 | 14880 | | |
| | | 94. | 5108 | எம்.ஸ்டாலின் ஜெயசந்திரன் | புதிய பேருந்து நிலைய ஐயுடிபி கடைகள் | 4302 | 51624 | 8604 | | |
| | | 95. | 5109 | எம்.சுதர்சன் | | 3660 | 43920 | 7320 | | |
| | | 96. | 5110 | எம்.சுதர்சன் | | 3641 | 43692 | 7282 | | |
| | | 97. | 5111 | எம்.சுதர்சன் | | 3641 | 43692 | 7282 | | |
| | | 98. | 5112 | எம்.சுதர்சன் | | 4187 | 50244 | 8374 | | |
| | | 99. | 5113 | எம்.சுதர்சன் | | 4187 | 50244 | 8374 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 100. | 5114 | எம்.சுதர்சன் | | 4197 | 50364 | 8394 |
| 101. | 5115 | மஜித் கான் | | 3218 | 38616 | 6436 |
| 102. | 5116 | கமர்தீன் | | 4210 | 50520 | 8420 |
| 103. | 5117 | கன்சுல்மஹரிபா | | 4551 | 54612 | 9102 |
| | | | | **6,68,219** | **80,18,628** | **13,36,438** |

| அரசாணை எண்.298, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.02.092020–ன்படி, குத்தகை 3 ஆண்டு இனங்களில் நீக்கம் செய்ய வேண்டிய இரண்டு மாத வாடகை விபரம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண் | வரிவிதிப்பு எண் | குத்தகையின் பெயர் | குத்தகைதாரரின் பெயர் | ஒரு வருட குத்தகை தொகை (ரூ) | ஒரு மாத குத்தகை தொகை (ரூ) | அரசாணையின்படி நீக்கம் செய்ய வேண்டிய இரண்டு மாத வாடகை தொகை |
| (i) | (ii) | (iii) | (iv) | (v) | (vi) | (vii) |
| 1. | 135/BD01/00051 | வாரச்சந்தையின் கட்டணம் | ஜெ.முஜிபுர்ரஹ்மான் | 3257888 | 271491 | 542982 |
| 2. | 135/BD01/00001 | ஆட்டி சாலை ஆடு அடிக்கம் கட்டணம் | சுரேஷ்யாதவ் | 242550 | 20213 | 40426 |
| 3. | 135/BD01/00055 | அரண்மனை சந்தில் கட்டண கழிப்பறை | க.கண்ணன் | 64717 | 5393 | 10786 |
| 4. | 135/BD01/00056 | அண்ணா | கே.செல்வேந்திரன் | 45203 | 3767 | 7534 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | பேருந்து நிலைய கட்டண கழிப்பறை | | | | | | |
| | | 5. | 135/BD01/00053 | அக்ரஹாரம் கட்டண கழிப்பறை | பாண்டி | 450482 | 37540 | 75080 | | |
| | | 6. | 135/BD01/00058 | தென்னை மரம் பராமரித்தல் | ஆதில்அமீன் | 7277 | 606 | 1212 | | |
| | | 7. | 135/BD01/00054 | இரு சக்கர வாகனம் நிறுத்துமிட கட்டணம் வசூல் | ஜி.செந்தில்குமார் | 1382535 | 115211 | 230422 | | |
| | | 8. | 135/BD01/00059 | பாண்டிக்கண்மாய் சாமி கட்டண கழிப்பறை | பி.எஸ்.இராமு | 1012500 | 84375 | 168750 | | |
| | | 9. | 135/BD01/00060 | சாலையோர வியாபாரி கட்டணம் | இராமர் | 3215000 | 267917 | 535834 | | |
| | | 10. | 135/BD01/00052 | புதிய பேருந்து நிலையம் குளியலறை மற்றும் கட்டண கழிப்பறை கட்டணம் வசூல் | எம்.பாலசுப்பிரமணியன் | 2205000 | 183750 | 367500 | | |
| | | 11. | 135/BD01/00051 | புதிய மற்றும் பழைய பேருந்து | பாலமுருகன் | 1221150 | 101762 | 203524 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | நிலையத்திற்கு பேருந்து வந்து செல்லும் கட்டணம் | | | | |
| | | | | **1,31,04,302** | **10,92,025** | **21,84,050** |

**<u>அலுவலக குறிப்பு–</u>1)**மேற்கண்டவாறு அரசாணை எண்.298, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.02.09.2020 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.8763/2020/ஆர்2, நாள்.29.09.2020 கடிதத்தினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2)இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் மாத வாடகை கடைகள் ஆகியவற்றிக்கு 01.04.2020 முதல் 31.05.2020 காலங்களுக்குரிய வாடகையினை கணிணியில் நீக்கம் செய்ய மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.2249/2020/அ1

**தீர்மானம் எண்.1272– அலுவலகக் குறிப்புகள் ஏற்பு.**

**தனி அலுவலர் மற்றும்**
**நகராட்சி ஆணையர்(பொ)**
**இராமநாதபுரம் நகராட்சி**